| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.சா.சேதுராம வர்மா,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி. |

**ந.க.எண். 025196/எச்1/2022** **நாள் : 13.12.2022**

**ஐயா /அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை –6– மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வு – மார்ச்/ஏப்ரல்–2023 மாற்றுத்திறனாளி பள்ளி மாணாக்கர்கள் – தேர்வு நேரத்தில் சலுகைகள் கோரும் விண்ணப்பங்கள் வரவேற்றல் – குறித்து.

**பார்வை :**
1. அரசாணை (நிலை) எண்.28, பள்ளிக் கல்வி(வி1) துறை, நாள்.10.02.2010.
2. அரசாணை (நிலை) எண்.2, பள்ளிக் கல்வி (வி1) துறை, நாள்.07.01.2012.
3. அரசாணை (நிலை) எண்.268, பள்ளிக் கல்வி (வி1) துறை, நாள்.19.10.2012.
4. அரசாணை (நிலை) எண்.62, பள்ளிக் கல்வி (அ.தே)த் துறை, நாள்.25.03.2022

-----

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும், தங்களது ஆளுகைக்குட்பட்ட அனைத்து மேல்நிலை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும், மார்ச்/ஏப்ரல்–2023 மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வு எழுதவுள்ள மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் +2 மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு தேர்வெழுத சலுகை வழங்குதல் தொடர்பான கீழ்க்காணும் அறிவுரைகளை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**பள்ளித் தலைமையாசிரியர்களுக்கான அறிவுரைகள் :**

1. பார்வையில் கண்டுள்ள அரசாணைகளில், அரசுத் தேர்வுத் துறையால் நடத்தப்படும் மேல்நிலை பொதுத் தேர்வுகளை எழுதும் தேர்வர்களுள், கீழ்க்காணும் ஆறு வகைகளுக்குட்பட்ட மாற்றுத் திறனாளித் தேர்வர்களின் நலன் கருதி, பிற மாணவர்களுக்கு சமமாகஅவர்களும் எவ்வித குறைகளுமின்றி தேர்வெழுதி மதிப்பெண்கள் ஈட்டுவதற்கு ஏதுவாக அவர்களுக்கு குறிப்பிட்ட சலுகைகளை தேர்வு நேரங்களில் வழங்க அரசு அனுமதித்துள்ளது. (அரசாணைகளை அரசுத் தேர்வுகள் இயக்கக இணையதளத்தில் (www.dge.tn.gov.in) காணலாம்)

2. மேற்குறிப்பிட்ட அரசாணைகளின்படி, பொதுத் தேர்வெழுதும் தேர்வர்களுக்கு உடல் குறைப்பாட்டின் அடிப்படையில் வழங்கப்படும் சலுகைகள் குறித்து தங்கள் பள்ளியில் +2 பயிலும் மாற்றுத் திறனாளி பள்ளி மாணவர்களுக்கு பள்ளி தலைமையாசிரியர் எடுத்துரைக்க வேண்டும்.

..2..

3. அரசாணைகளின்படி உடல் குறைபாட்டின் அடிப்படையில் தேர்வெழுத சலுகைகள் கோரும் மாணவரிடம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தினை (படிவம்–1 ) வழங்கி, மாணவரிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம், மாற்றுத் திறனாளிக்கான அடையாள அட்டையின் நகல் அல்லது மருத்துவக் குழுவின் பரிந்துரைக் கடிதம் ஆகியவற்றை பள்ளித் தலைமையாசிரியர் பெற்றுக் கொள்ளவேண்டும். **(மருத்துவசான்றிதழில் நோயின் தன்மை மற்றும் மாணவருக்கு வழங்க வேண்டிய சலுகை பற்றிய விவரம் ஆகியவை கண்டிப்பாக இடம் பெற்றிருக்க வேண்டும். மேலும், மருத்துவச்சான்றுகள் உரிய காலவரையறைக்குள் இருக்க வேண்டும் ).**

4. மேற்குறிப்பிட்டவாறு, மாற்றுத் திறனாளி தேர்வர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பபடிவங்கள் மற்றும் மருத்துவச் சான்றுகளை, பள்ளித் தலைமையாசிரியர்கள் **26.12.2022** தேதிக்குள் சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

5. மேற்குறிப்பிட்ட தேதிக்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளமாட்டாது, அவ்வாறு தாமதமாக விண்ணப்பங்கள் பெறப்படின் சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர்கள் மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேற்குறிப்பிட்டவாறு தங்கள் ஆளுகைக்குட்பட்ட மேல்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களிடமிருந்து பெறப்படும் மாற்றுத் திறனாளிக்கான விண்ணப்பங்களை சரிபார்த்து தகுதியுள்ள தேர்வர்களின் விவரத்தினை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் (படிவம் 2) பூர்த்தி செய்து (பதிவெண் தவிர அனைத்து கலங்களும் கண்டிப்பாக பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்) **06.01.2023** தேதிக்குள் சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், முதன்மைக் கல்வி அலுவலர்களால் பரிந்துரைக்கப்பட்டு, ஒருமித்து தொகுத்து அனுப்பப்படும் பட்டியல் மட்டுமே பரிசீலிக்கப்படும், எனவும், முதன்மைக் கல்வி அலுவலரின் பரிந்துரையின்றி பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

ஒம்/–
இயக்குநர்

**இணைப்பு**

படிவம் 1, படிவம் 2 மற்றும் சலுகைப் பட்டியல்

**நகல்**

1. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்